திருமதி ஜோதி வெங்கடாசலம்: இந்த சோமசிலா திட்டத்திலிருந்து நமக்குத் தண்ணீர் கொடுப்பதற்கு ஆந்திர அரசு ஒப்புக் கொண்டாலுங்கூட, அதற்காகச் செலவாகின்றதில் ஒரு தொகையை தமிழ் நாடு அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று ஏதாகிலும் கேட்டிருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அவர்கள் அப்படிச் சொல்லவில்லை. ஆனால், முன்னால் ஆந்திராவினுடைய முதலமைச்சரிடத்தில் பேசுகிற நேரத்தில் அதுபோன்ற ஒரு கருத்தை அவர்கள் சாதாரணமாக வெளியிட்டார்களே அல்லாமல், வலியுறுத்தி ஒன்றும் எடுத்துச் சொல்லவில்லை. சோமசிலா நீர்த்தேக்கம் அங்கு தொடங்கப்பெற்றதும் நாம் தண்ணீர் பெறுவதற்கு வழி இருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: சோமசிலா நீர்த்தேக்கத்திற்கு ஆகக்கூடிய பரிபூரணச் செலவைக்கூட தமிழக அரசு ஏற்றுக் கொண்டால் அதிகமாகத் தண்ணீர் கொடுக்கவேண்டும் என்று சில நாட்களுக்கு முன்பு அமைச்சரவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அத்துடன், கிருஷ்ணாவிலிருந்து வேறு முறையிலும் தண்ணீர் கொண்டுவருவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய நம்முடைய அரசு ஆந்திர அரசோடு கலந்து யோசிக்குமா

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அம்மையார் அவர்கள் கேட்ட கேள்வியையொட்டி பதிலளிக்கின்றேன். அந்த சோமசிலா நீர்த்தேக்கம் கட்டுவதற்கு நாம் பங்குத் தொகை செலுத்திவிடலாம். சோமசிலா திட்டத்திலிருந்து நாம் தண்ணீர் எடுத்துக் கொள்வதற்கு அந்தத் திட்டத்திலே செய்யவேண்டிய மாறுதல்களுக்காக நாம் ஓரளவுக்கு அந்தப் பணத்தை அளிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அதை நாம் மறுக்கவில்லை. அவைகளைப்பற்றியெல்லாம் இப்போதே நாம் உடனடியாக எதுவும் கணக்கிட்டுச் சொல்வதற்கில்லை. அந்தத் திட்டத்திற்கு என்ன செலவு ஆகிறது என்பதைப் போன்ற விவரங்களையெல்லாம் அவர்கள் அளித்த பிறகுதான் மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள் கேட்ட கேள்விக்கு நான் விவரமாகப் பதில் அளிக்க முடியும்.

தமிழ்நாடு அரசுச் செய்திப்படங்கள்

* 347 வினா.—**திரு. பி. எஸ். மணியன்:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அரசின் சாதனைகளை விளக்கும் செய்திப் படங்களைக் கிராமப்புறங்களில் காட்டுவதற்குத் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஏற்கெனவே இத்திட்டம் நடைமுறையில் உள்ளது.

1971 டிசம்பர் 14]

திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே. செய்திப் படங்களை மட்டுமல்லாமல் தமிழக மக்களின் வாழ்க்கை இயல், பண்பாடு, வரலாற்றுச் சிறப்பு ஆகிய இவைகளை விளக்கும் வர்ணப்படங்களையும் அரசு தயாரிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அவைகளைத் தயாரிப்பதில் எந்தவிதமான தடையுமில்லை. இப்பொழுதே உலகத் தமிழ் மாநாட்டுப் படம் ஒன்றைப் பார்த்தே நம்முடைய தமிழகத்தின் வரலாறு, இலக்கியம், காவியம் இவைகளை மக்கள் தெரிந்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தப்படம் பழமையானபிறகு புதியதொரு முயற்சியை மேற்கொள்ளலாம்.

திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவரவர்களே, தமிழக அரசு வெளியிடும் செய்திப்படங்களைத் திரையிட மறுக்கும் தியேட்டர்களுக்கு லைசென்ஸை மறுக்க இந்த அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அப்படியொன்றும் எந்தத் தியேட்டர்காரர்களும் அந்தப் படங்களை வெளியிட மறுத்ததாக என்னிடத்தில் தகவல் இல்லை.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, இப்பொழுது மாவட்டங்களில் இதுமாதிரி செய்திப்படங்கள் காட்டப்படுகின்றன. என்று முதலமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் எல்லா யூனியன்களிலும் அவ்வளவு விரிவாகக் காட்டப்படவில்லை. ஆகவே எல்லா ஒன்றியங்களிலும் விழாக்கள் நடைபெறும் பொழுதாவது இவைகளைக் காட்ட வேண்டிய வசதிகளையும், மின்சாரத்தால் ஏற்படும் விபத்துக்கள் மற்றும் குடும்ப நலத் திட்டத்தைப் பற்றியும், தீவிர விவசாயப் பண்ணை பற்றிய திட்டங்கள் ஆகியவைகளையும் இம்மாதிரி விழாக்கள் நடைபெறும் நேரங்களிலும், அமைச்சர்கள் பங்கேற்கும் நேரத்தில் விழாக்களின் பின்னால் காட்டுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்பொழுது மக்கள் தொடர்பு அதிகாரிகளின் மூலம் மாவட்டத்தின் தலைநகரங்களிலும், பேரூர்களிலும், சிற்றூர்களிலும் இப்படிப்பட்ட செய்திப்படங்கள் காட்டப்படுகின்றன. மேலும் அமைச்சர்கள் பங்குபெறும் நிகழ்ச்சிகள் மட்டுமல்லாமல், பொதுவாக மக்கள் எங்கெங்கு கூடுகிறார்களோ அப்படிப்பட்ட இடங்களிலும் இந்தப் படங்கள் வெளியிடப்படுவதால் மக்களை அழைத்து அவர்களுக்கு அரசின் சாதனைகளை விளக்கும் வகையிலே மக்களுக்கும் அரசுக்கும் ஏற்பட வேண்டிய தொடர்புகளைக் கொண்டிருக்கிறது. இந்தத் தொடர்புகளை, வெளியிடும் பொறுப்பை மக்கள் தொடர்பு அதிகாரிகள், மண்டல அதிகாரிகள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். மேலும் அதை விரிவாக்க மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வி பயன்படும் என்று கருதுகிறேன்.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, இந்த டாகுமெண்டரி பிலிம்கள் எத்தனை தயாரிக்கிறார்கள், ஒரு ரிலீசிலே எத்தனை தயாரிக்கிறார்கள்? நம்முடைய தமிழகம் பூராவிலும் ரிலீஸ் செய்ய நிறைய வேண்டுமென்று கோரிக்கை வருகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: எத்தனை தயாரிக்கிறார்கள் என்னும் விவரம் என்னிடத்தில் இல்லை. கோரிக்கைகள் வருகின்றன, அவைகள் முடிந்தவரையிலும் நிறைவேற்றப் படுகின்றன.

* 348 வினா.—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

தமிழ்நாடு அரசு செய்திப் பிரிவினால் எடுக்கப்படும் செய்திப் படம், தமிழ்நாட்டிலுள்ள எல்லாத் தியேட்டர்களிலும் காட்டப் படுகிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஆம்.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, இந்தச் செய்திப் படங்கள் நகரங்களில்தான் எடுத்த ஒரு வாரத்திற்குள் காட்டப்படுகின்றன. ஆனால் கிராமங்களுக்கு வருவதற்கு 6 அல்லது 7 மாத காலம் ஆகின்றது. எனவே கிராமப்புற மக்கள் செய்திகளை உடனடியாகத் தெரிந்துகொள்ள குறுகிய காலத்தில் ஏறத்தாழ ஒரு மாத காலத்திற்குள் எல்லாக் கிராமங்களிலும் காட்ட ஏற்பாடுகளை அரசு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஏறத்தாழ இரண்டாயிரம் தியேட்டர்கள் தமிழ்நாட்டில் இருப்பதாக நான் அறிகிறேன். நாம் எடுக்கும் இந்தப் படங்களின் பிரதிகள் 50 அல்லது 55 பிரதிகள்தான். இது மட்டுமல்ல, பொதுவாகவே திரைப்படங்கள்-முழு நீளத் திரைப்படங்கள் எடுப்பவர்கள் கூட 40 அல்லது 50 பிரதிகள்தான் எடுக்கிறார்கள். அவர்களும் அந்தப் படங்களைத் தமிழகம் முழுவதும் எல்லாயிடங்களிலும் திரையிட 6 மாத காலம் ஆகிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னது போல் சென்னையிலே மட்டுமல்லாமல், சென்னையிலே பத்து இடங்களிலே காட்டப்படுகின்ற அதேநேரத்தில் தமிழ்நாட்டிலே பல்வேறு கிராமங்களிலும் அப்படிப்பட்ட படங்கள் காட்டப்படுகின்றன. எனவே ஒரு வட்டம் வருவதற்கு, 1,360 தியேட்டர்களில் இந்த 55 பிரதிகளைக் கொண்டு காட்டுவதற்கு 6 மாத காலமாகிறது. அதைத் தவிர்க்க வேண்டுமென்றால் நாமும் 1,000 பிரதிகள் எடுக்க வேண்டும். அதற்காகும் செலவு மிக அதிகமாகும்.